**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.202/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | ராஜசெல்வம், வயது 36 |
| Father Name/Husband Name | : | அந்தோணிபிச்சை |
| Village | : | அன்பின்நகரம் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | முதல்நிலை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of June 2026.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது கோவில்பட்டி போக்குவரத்து காவல் பிரிவில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.01.2025 ஆம் தேதி கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்தபோது காலை 09.00 மணியளவில் நான், சிறப்பு உதவி ஆய்வாளர் பொன்ராஜ் மற்றும் தலைமை காவலர் 2074 மணிமாறன் ஆகியோர் சகிதம் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து செய்து கண்காணித்து வந்த போது சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி மூக்கைரை பிள்ளையார் கோவில் ஜங்கஷனில் சென்று பார்த்தபோது பின்னர் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்து முனியசாமி மகன் விஜயகுமார், சுப்பிரமணியம் 7 வது தெரு என்று விலாசம் கூறிய நபர் கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் பையை சோதனை செய்து பார்த்தபோது சுமார் 180 ML அளவு கொண்ட Vorion Brandy பாட்டில்கள் 42 எண்ணமும், 180 ML அளவு கொண்ட Old chef Brandy பாட்டில்கள் 2 எண்ணமும், 180 ML அளவு கொண்ட one man army Brandy பாட்டில்கள் 4 எண்ணமும் வைத்திருந்தார்.

2 மேற்படி நபரை விசாரித்தபோது டாஸ்மாக் கடையிலிருந்து பிராந்தி பாட்டிலை வாங்கி அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருந்ததாக கூறினார். மேற்படி நபர் சட்ட விரோதமாக மதுபாட்டில்களை விற்க வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி சொத்துக்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி, அந்த அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் போலீசார் பார்டியாகிய நாங்களே

கையொப்பம் செய்தோம். மேற்படி சொத்து சகிதம் எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் நிலைய குற்ற எண். 3/2025 U/s 4(1)(a) TNP 4(1)(C)TNP Amendment Act ஆக வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். அந்த அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3 காவல் நிலைய ரோந்து பணி காலை 07.00 மணிக்கு ஆரம்பித்துவிடும் என்றால் சரியல்ல, எத்தனை மணிக்கு வேண்டுமென்றாலும் ஆரம்பிக்கலாம். சம்பவ காலத்தில் காலை 07.30 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து ரோந்துக்கு சென்றோம். எனக்கு சம்பவ சமயத்தில் எட்டயபுர ரோடு டாஸ்மாக் கடை பகுதியில் ரோந்து பணி ஒதுக்கப்பட்டது. நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது மது விற்பனை நடைபெற்று கொண்டிருந்ததாக தனி அறிக்கையில் துலங்காது என்றால் ஞாபகம் இல்லை. எனது கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது மதுவிற்பனை நடைபெற்று கொண்டிருந்ததாக துலங்காது என்றால் சரிதான்.

4 சம்பவ நேரம் காலை நேரம் என்பதால் 10, 15 பொதுமக்கள் நடமாட்டம் இருந்திருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. நானும், உதவி ஆய்வாளரும் தனி நபரை சாட்சியாக அழைத்ததாக அத்தாட்சியில் துலங்காது என்றால் சாட்சியாக அழைத்தோமா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்பதால்தான் அதுகுறித்த விவரம் ஞாபகம் இல்லை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரோந்து சென்றதற்கு தனி அறிக்கை தாக்கல் செய்து அதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த தனி அறிக்கையை தாக்கல் செய்தால் எந்த வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபட்டது என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான்.

5 நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றாலும், புள்ளி விவர

கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யபட்டது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.
**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court
in the presence of accused and
read over to the witness and
acknowledged by him/her to be
Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.